## இயல் 7.8 - புள்ளியியல்

பயிற்சி எண் :: 7.8.2.1.F

புள்ளியியல் - பல்வகைத் திறனறி பயிற்சிக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 5.4.1-3

Statistics - Multitasking Problems

## புள்ளியியல் - பல்வகைத் திறனறி பயிற்சிக் கணக்குகள் - தநாஅபு - பயிற்சி 5.4.1-3

1. 15 மதிப்புகளின் கூட்டுச்சராசரி 85 எனக் கணக்கிடப்பட்டது. அவ்வாறு செய்யும்போது ஒரு மதிப்பு 28 இக்கு பதிலாக 73 என்று தவறாக எடுத்துக்கொள்ளப்பட்டது எனில், சரியான சராசரியைக் காண்க.

15 மதிப்புகளில் முதலில் கண்டுபிடிக்கப்பட்ட கூடுதலை $x$ என்க.

$$\text{சராசரி} = \frac{\text{விவரங்களின் கூடுதல்}}{\text{விவரங்களின் எண்ணிக்கை}}$$

$$85 = \frac{x}{15}$$

$$x = 85 \times 15 = 1275$$

$$\begin{array}{r} 85 \\ \times\ 15 \\ \hline 425 \\ 85\phantom{0} \\ \hline 1275 \end{array}$$

15 மதிப்புகளின் சராசரி காணும் போது ஒரு மதிப்பு 28 க்கு பதிலாக 73 என தவறாக எடுத்துக்கொள்ளப்பட்டது.

$$\therefore \text{15 மதிப்புகளின் சரியான கூடுதல்} = 1275 - \underset{\text{தவறான மதிப்பு}}{73} + \underset{\text{சரியான மதிப்பு}}{28} = 1230$$

$$\therefore \text{சரியான சராசரி} = \frac{1230}{15} = \frac{\cancel{1230}^{82}}{\cancel{15}_{1}} = 82$$

∴ 15 மதிப்புகளின் சரியான சராசரி = **82**

2. $25, 16, 15, 10, 8, 30$ இன் இடைநிலையைக் காண்க.

$$\text{தரவுகளின் ஏறுவரிசை} = \overset{1}{8}, \overset{2}{10}, \overset{3}{15}, \overset{4}{16}, \overset{5}{25}, \overset{6}{30}$$

$$\left.\begin{array}{r}\text{உறுப்புகளின்} \\ \text{எண்ணிக்கை } (n)\end{array}\right\} = 6 \qquad \text{(இரட்டைப்படை எண்)}$$

$$\therefore \text{இடைநிலையளவு} = \frac{1}{2}\left[\left(\frac{n}{2}\right)\text{வது உறுப்பு} + \left(\frac{n}{2}+1\right)\text{வது உறுப்பு}\right]$$

$$= \frac{1}{2}\left[\left(\frac{6}{2}\right)\text{வது உறுப்பு} + \left(\frac{6}{2}+1\right)\text{வது உறுப்பு}\right]$$


$$= \frac{1}{2}[3 \text{ - வது உறுப்பு} + 4 \text{ வது உறுப்பு}]$$

$$= \frac{1}{2}[15+16] = \frac{1}{2}[31] = 15.5$$

∴ கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின் இடைநிலை **15.5** ஆகும்.

3. $2, 5, 5, 1, 3, 2, 2, 1, 3, 5, 3$ இன் முகடைக் காண்க.

| மதிப்புகள் | 1 | 2 | 3 | 5 | மொத்த தரவுகளின் எண்ணிக்கை ↓ |
|---|---|---|---|---|---|
| நேர்கோட்டுக் குறி | \|\| | \|\|\| | \|\|\| | \|\|\| | |
| நிகழ்வெண் | 2 | 3 | 3 | 3 | 11 |




∴ கொடுக்கப்பட்டுள்ள தரவுகளின் முகடுகள் **2**, **3** மற்றும் **5** ஆகியன ஆகும்.

## இதன் காணொளியின் YouTube இணையதள இணைப்பு (YouTube URL)

https://youtu.be/_-XgoZqGjc8

## Information Rights & Disclaimers


Sum & solution prepared on Tuesday 17th January, 2023 :: 18:55 Hrs.

All rights related to all contents given in this website and in all its links such as Structure, problem creation, problem presentation, solution, solution presentation, style, solution model given in the PDFs & Videos, voice over content, style of presentation, Video creation & its theme, presentation, presentation style and model are reserved to;

V K Ramaswamy Iyengar & Chellammal Educational Trust, Coimbatore - 641 046, Tamilnadu, INDIA. Regd.R/Vadavalli/Book-4/16/2020 dt.31-Jan-2020.

https://ramaswamychellammaltrust.org § info@ramaswamychellammaltrust.org

Being the very purpose; viewing, browsing and downloading the contents for learning, training, coaching and teaching purpose are jointly and severally well permitted. However, doing so for commercial purpose(s) is/are strictly prohibited.